## 12. விளம்பரங்களிற்கான அனுமதி

டிஜிட்டல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் தகவல்கள்/கொடுக்கல் வாங்கல்கள் (SMS/ WhatsApp/ e-mail)

இணையத்தளம் ஊடாக அல்லது நேரடியாக சமூகமளித்து விளம்பரக் காட்சிப்படுத்தலுக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்து சமர்ப்பித்தல்

பொறுப்பு: விண்ணப்பதாரி

↓

விண்ணப்பம் உபவிதிகளுடன் ஒத்துச் செல்கின்றதா என்பதைப் பரீட்சித்து விண்ணப்பதாரிக்குத் தொடராய்வு இலக்கமொன்றை வழங்குதல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

அறவிடப்பட வேண்டியகட்டணம் தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப் படிவத்தினை வருமானப் பரிசோதகருக்கு முன்வைத்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

அறிவிடப்படவேண்டிய கட்டணம் தொடர்பான பரிந்துரைகளை விடய உத்தியோகத்தர் ஊடாக ஆணையாளருக்கு/ செயலாளருக்கு முன்வைத்தல்

பொறுப்பு: வருமானப் பரிசோதகர்

↓

அனுமதிப்பத்திரத்தை வழங்குவது பற்றிய பரிந்துரையை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல் தொடர்பான தீர்மானத்தினை விடய உத்தியோகத்தருக்கு வழங்குதல்

பொறுப்பு: ஆணையாளர்/செயலாளர்

↓

விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?

ஆம்

அனுமதிப்பத்திரத்தைத் தயாரித்து மாநகர ஆணையாளரின்/செயலாளரின் கையொப்பத்தினைப் பெற்றுக்கொண்டு முன் அலுவலகத்திற்கு அனுப்பி செலுத்த வேண்டிய தொகையை விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்

பொறுப்பு: விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

↓

இணையத்தளம் ஊடாக அல்லது சமூகமளித்து கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்

பொறுப்பு: விண்ணப்பதாரி

↓

பணத்தை அறவிட்டு அனுமதிப்பத்திரம் மற்றும் பற்றுச்சீட்டை வழங்குதல்,பெறுமதியை வருமானத் தலைப்புக்கு வைப்புச் செய்து ஆவணங்களை இற்றைப்படுத்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

இல்லை

காரணங்களைத் தெளிவுபடுத்தி கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையை விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்

பொறுப்பு: விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

↓

குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்டிருப்பின், அவற்றை சரி செய்து மீண்டும் அறிக்கையிடுதல்

பொறுப்பு: விண்ணப்பதாரி

செயலாற்றுகை சுட்டி



## 12. விளம்பரங்களிற்கான அனுமதி

### 1. அறிமுகம்

விளம்பர அறிவித்தல் என்பது எவரேனும் ஆளினால் ஏதேனும் காணியிலோ, கட்டிடத்திலோ வாகனத்திலோ நிர்மாணிப்பிற்கு மேலாக அல்லது அதன் மீது முழுமையாகவோ பகுதியளவிலோ காட்சிப்படுத்தப்படுகின்றதும் மக்களின் அறிந்துகொள்ளல் அல்லது கவனத்தின் பொருட்டு காட்சிப்படுத்துகின்ற, ஒட்டுகின்ற, பொருத்துகின்ற, நிர்மாணிக்கின்ற, தொங்கவிடப்படுகின்ற அல்லது வேறுவிதமாக இடஅமைவு செய்யப்படுகின்ற பிரச்சாரக்கருமத்திற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் எழுத்து, சொல் அல்லது உருவப்படக்குறிப்பினை உள்ளடக்குகின்ற விளம்பர அறிவித்தல், பெனர் அல்லது கட்அவுட் அல்லது வேறுவிதமான மாதிரியுரு, விளம்பரத்தாள் அறிவித்தல், வர்த்தக அறிவித்தலையும் கருதுகின்றது. இந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்களை பொதுமக்களின் பாதுகாப்பையும், வசதிகளையும் சௌகரியங்களையும் உறுதிசெய்வதற்கேற்றவாறு கட்டுப்படுத்தி நிர்வகித்தல் என்பது உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பாகும்.

### 2. சட்டஅதிகாரம்

| | |
|---|---|
| பிரதேச சபை | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் 122(1), 126 (vii) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட உபவிதிகள்<br>வடக்கு மாகாணம்: 11.01.2016 மற்றும் 12.03.2020 ஆகியதிகதிகளில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உபவிதிகள் |
| நகர சபை | நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு153 (1),157 (6),(g) மற்றும் (7) (f), (c,h) மற்றும் 9(n) இன் உப பிரிவு 7 (h) இன் கீழ் நிறைவேற்றப்பட்ட உபவிதிகள் |
| மாநகர சபை | மாநகர சபை கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 252) பிரிவு 267 (1) 272 (27) இன் கீழ் நிறைவேற்றப்பட்ட உபவிதிகள் |

### 3. கட்டணம்

| | |
|---|---|
| பிரதேச சபை | வர்த்தமானிப்பத்திரிகையில் வெளியிடப்பட்ட உபவிதிகள் |
| நகர சபை | விளம்பரத் தன்மையைப் பொறுத்து செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிக் கட்டணம் |
| மாநகர சபை | விளம்பரத் தன்மையைப் பொறுத்து மாநகரசபை கட்டளைச்சட்டம் மாநகரபிதாவால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிக் கட்டணம் |

4. **சமா்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

(அ) இங்கே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரித்து சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்.

(ஆ) A 4 அளவிலான கடதாசியில் அச்சிடப்பட்ட அல்லது கையினால் வரையப்பட்ட (பயன்படுத்தப்படும் வர்ணங்களையும் காட்டுகின்ற), காட்சிப்படுத்த எதிர்பார்க்கும் பிரச்சார விளம்பரத்தின் சமச்சீரான மாதிரியொன்று

(இ) ஏதேனும் வீதியின் இருப்புப் பகுதியில் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்ற பிரச்சார விளம்பரப் பலகையாக இருப்பின் ஏற்புடையவாறு அந்த வீதி சொந்தமாகவுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து அதற்காக வழங்கப்பட்ட அனுமதி

(ஈ) ஏற்புடைய பிரச்சார விளம்பரப் பலகை காட்சிப்படுத்தப்படும் இடத்திற்குரிய பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவினால் இணக்கம் தெரிவித்து வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியை சமர்ப்பிக்கவேண்டும்.

(உ) ஏதேனும் தனியார் காணியொன்றில் அல்லது கட்டிடத்தில் பொருத்தப்படுகின்ற அல்லது காட்சிப்படுத்தப்படுகின்ற பிரச்சார விளம்பரமாக இருப்பின், அந்தக் காணியின் அல்லது கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளர்களினால் அதற்கு இடமளிப்பதற்குவிருப்புத் தெரிவிக்கும் கடிதத்தின் பிரதி.

## 5. செயல்முறை

| செயல்முறை | காலகட்டம் | அதிகாரம் |
|---|---|---|
| உள்ளூராட்சி மன்றத்திலிருந்து இலவசமாக பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி விண்ணப்பித்தல் | அதேநாளில் | |
| விண்ணபபத்தைப் பெற்றவுடன், அனுமதிக் கட்டணத்தை முடிவுசெய்ய ஒரு அறிக்கை பெறப்படும் (இதற்கு ஒரு களப்பார்வை தேவைப்படலாம்) | 2 நாட்கள் | விடய உத்தியோகத்தர்<br>வருமானப் பரிசோதகர் |
| விண்ணபத்தினை அனுமதித்தல் | 1 நாள் | மாநகரமுதல்வர்/ஆணையாளர்<br>தவிசாளர்/செயலாளர் |
| கட்டணம் செலுத்துதல் மற்றும் பற்றுச்சீட்டு வழங்குதல் | அதேநாளில் | விடய உத்தியோகத்தர் |
| அதற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து அனுமதிபத்திரம் வழங்கவேண்டும் | அதே நாளில் | விடய உத்தியோகத்தர் |

.

**இணைப்பு: விளம்பரஅனுமதி விண்ணப்பபடிவம்**

**விளம்பரத்திற்கான அனுமதி – முன்மொழியப்பட்ட விண்ணப்பபடிவம் (பிரதேசசபை)**

---

**……………………உள்ளூராட்சிமன்றம்.**

1. முழுப்பெயர்:
2. நிரந்தரமுகவரி:
3. தே.அ.இ.இல:
4. நிரந்தரதொலைபேசி: கைத்தொலைபேசி:
5. மின்னஞ்சல் முகவரி:
6. விளம்பரமாதிரி இணைக்கப்பட்டுள்ளது: ஆம்/இல்லை
7. அமைவிடமாதிரி இணைக்கப்பட்டுள்ளது: ஆம்/இல்லை
8. விளம்பரத்தின் தன்மை: ஒருபக்கம் ☐ இருபக்கம் ☐ ஒளியேற்றப்பட்டது ☐
9. அனுமதி கோரப்படும் காலம்: ……………………..இருந்து…………………..வரை
10. விளம்பரத்தின் அளவு: நீளம்:……….அகலம்:………….உயரம்………………………
11. விளம்பரம் இடம் பற்றிய விபரம்: தனியார் காணி/வீதி அபிவிருத்தி திணைக்களவீதி/பிரதேசசபை ஆதனம்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்கு முரணானவை என்பது தெரியவரும் பட்சத்தில் குறித்த பதாகை எதுவித முன்னறிவித்தலின்றிவெட்டி அகற்றி உள்ளூராட்சிமன்றத்திற்கு உரியதாக்குவதற்கு உட்படுவேன் என்று இணங்குகின்றேன்.

………………….. ……………………………………

திகதி: விண்ணப்பதாரியின் கையொப்பம்

அலுவலக உபயோகத்திற்கு

பின்வருகின்ற ஒழுங்கில் அறிக்கையிடுங்கள்

…………………………………………………

தவிசாளர்/செயலாளர்

பிரதமலிகிதர்/பகுதிதலைவர்

குறித்த இடத்தில் …………………………..அளவுடையவிளம்பரம் அமைப்பது பொருத்தமானது/பொருத்தமற்றது.

திகதி:………………………. ……………………………………………………..

வருமான வரி உத்தியோகத்தர்

செயலாளர்,

மேற்படி விளம்பரத்தினை சிபாரிசு செய்கின்றேன்/சிபாரிசு செய்யப்படவில்லை

திகதி:………………………..  …………………………………………………………..

பிரதமலிகிதர்/பகுதிதலைவர்

விளம்பரத்தின் அளவுநீளம்………………………..அகலம்…………..பரப்பு (சதுரஅடி)…………………………….

| விபரம் | தனியார் காணி | வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதி | பிரதேசசபை ஆதனம் | பிரதேசசபை வீதி |
|---|---|---|---|---|
| ஒப்பந்தம் உண்டு | | | | |
| நிலவாடகை | | | | |
| வெளிப்படுத்தல் கட்டணம் | | | | |
| மொத்தக்கட்டணம் | | | | |
| VAT | | | | |
| NBT | | | | |
| மொத்த தொகை | | | | |

…………………………………………………..  ……………………………………………….

திகதி  அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரம் அனுமதிக்கப்படுகின்றது/அனுமதிக்கப்படவில்லை.

…………………………………………………..  ……………………………………………….

திகதி  செயலாளர்